தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை - 600006.

ந.க.எண்.34874/எம்1/இ1/2025 நாள் :25.08.2025

| | |
|---|---|
| பொருள்: | பள்ளிக் கல்வி - 2025-26- மன்றச் செயல்பாடுகள் - இலக்கிய மன்றம், வினாடிவினா மன்றம் மற்றும் சிறார் திரைப்படம் மன்றங்களுக்கான வட்டார அளவிலான போட்டிகள் – விரிவான வழிகாட்டு நெறிமுறைகள்– சார்ந்து |
| பார்வை: | 1. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34874/எம்1/இ1/2025 நாள் :17-07-2025.<br>2. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34874/எம்1/இ1/2025 நாள் :11-08-2025. |

**********

பார்வை - 1 & 2 ல் காணும் செயல்முறைகளின்படி, 2025-2026 ஆம் ஆண்டில், 6 முதல் 9 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான, இலக்கிய மன்றம், வினாடிவினா மன்றம் மற்றும் சிறார் திரைப்படம் மன்றங்களுக்கான பள்ளி அளவிலான போட்டிகளை நடத்துதல் சார்ந்து வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, பள்ளியளவில் போட்டிகள் திட்டமிட்டு நடத்தப்பட்டு, இலக்கிய மன்றம் சார்ந்த ஒவ்வொரு போட்டியிலும் முதலிடம் பெற்ற மாணவர் மற்றும் வினாடிவினா மன்றப் போட்டியில் முதலிடம் பெற்ற குழு (இரண்டு மாணவர்கள்) மற்றும் சிறார் திரைப்படம் மன்றம் சார்ந்த ஒவ்வொரு போட்டியிலும் முதலிடம் பெற்ற மாணவர் மட்டும் அடுத்த நிலைப் போட்டியான வட்டார அளவிலான போட்டியில் பங்கேற்க செய்தல் வேண்டும்.



Scanned with OKEN Scanner

வட்டார அளவிலான போட்டிகள் நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் :

- வட்டார அளவிலான மன்றப் போட்டிகளை 02-09-2025 முதல் 04-09-2025 ஆகிய நாட்களில் திட்டமிட்டு போட்டிகளை நடத்தி வெற்றியாளர்களின் விவரங்களை 05-09-2025-ற்குள் EMIS தளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.
- வட்டார அளவிலான போட்டிகளுக்கு மாணவ, மாணவிகளை பாதுகாப்பாக அழைத்துச்சென்று மீண்டும் கொண்டுவந்து சேர்த்தல் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்பாகும்.
- வட்டார அளவிலான போட்டிகளுக்கு செல்லும் மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து ஒப்புதல் கடிதம் (Consent Letter from Parent) கட்டாயமாக பெறப்படுதல் வேண்டும். அவ்வாறாக பெறப்படும் ஒப்புதல் கடிதங்களை முறையாக பராமரித்தல் சார்ந்த தலைமையாசிரியரின் பொறுப்பாகும்.
- வட்டார அளவிலான போட்டிகளில் பங்கேற்கச் செல்லும் மாணவ, மாணவியருடன் ஒரு ஆண் ஆசிரியர், ஒரு பெண் ஆசிரியை கட்டாயம் உடன் செல்லுதல் வேண்டும்.
- ஒவ்வொரு போட்டிக்குமான நடுவர்களை (மூன்று நடுவர்கள்) முன்கூட்டியே தேர்வு செய்து, ஒவ்வொரு போட்டிக்கும் உரிய நடுவர்கள் குறித்த நேரத்தில், சரியான போட்டியில் கலந்துகொள்வதை வட்டார அளவிலான அமைப்புக்குழு உறுதி செய்தல் வேண்டும்.



Scanned with OKEN Scanner

❖ ஒவ்வொரு போட்டிக்குமான மூன்று நடுவர்களின் விவரம் பின்வருமாறு

| மன்றப் போட்டிகள் | நடுவர்கள் |
|---|---|
| தமிழ் இலக்கிய மன்றப் போட்டிகள் | முதுகலை தமிழ் ஆசிரியர்–1<br>பட்டதாரி தமிழ் ஆசிரியர்கள் – 2 |
| ஆங்கில இலக்கிய மன்றப் போட்டிகள் | முதுகலை ஆங்கில ஆசிரியர்–1<br>பட்டதாரி ஆங்கில ஆசிரியர்கள் – 2 |
| வினாடி வினா மன்றப் போட்டி | Quiz Master (தமிழ் மற்றும் ஆங்கில முதுகலை ஆசிரியர்)<br>போட்டி நடைபெறுவதற்கு முந்தைய தினம் இணைப்பு – 4ல் வழங்கப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு சுற்றுக்குமான கேள்விகளை தயாரிப்பதற்காக தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் பட்டதாரி ஆசிரியர்கள் கலந்தாலோசித்து கேள்விகளை வடிவமைத்தல் வேண்டும். அவ்வாறாக வடிவமைக்கப்பட்ட கேள்விகள் வினாடிவினா அமைப்புக் குழுவினரிடம் சமர்பிக்கப்படுதல் வேண்டும். |
| சிறார் திரைப்பட மன்றப் போட்டிகள் | முதுகலை ஆசிரியர்–1<br>பட்டதாரி ஆசிரியர்கள் – 2 |

❖ ஒவ்வொரு போட்டிக்குமான மதிப்பீட்டு முறையினை பின்பற்றி ஒவ்வொரு போட்டிக்கான நடுவர்களும் மதிப்பிடுதல் வேண்டும்.

❖ ஒவ்வொரு போட்டிக்கும் உரிய மதிப்பெண் தாள்களை அந்தந்த போட்டிகளுக்குரிய நடுவர்கள் முறையாக பராமரிக்க வேண்டும்.

❖ நடுவர் குழுவில் இடம் பெறுவதற்காக தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியர்கள்/ தலைமையாசிரியர்கள் தாங்கள் நடுவர்களாக பங்குபெறும் போட்டிகளில் தங்கள் பள்ளிகளின் மாணவர்கள் பங்கேற்பின், சார்ந்த போட்டிகளில் அவர்கள் நடுவர்களாக நியமிக்கப்படுவதை தவிர்த்தல் வேண்டும்.



Scanned with OKEN Scanner

❖ இவ்வாறாக, வட்டார அளவில் இருந்து, முதல் மூன்று வெற்றியாளர்களை போட்டிக்கான நடுவர் குழு தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

❖ நடுவர்களின் மதிப்பீட்டு படிவத்தில் அடித்தல், திருத்தல், வெள்ளை மை வைத்து அடித்தல் ஆகியன முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். தவிர்க்க முடியாத நிலையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதன் எதிரே சார்ந்த நடுவரின் முழு கையொப்பம் கட்டாயமாக இடப்படுதல் வேண்டும்.

❖ ஒவ்வொரு வட்டாரத்திலும், ஒவ்வொரு போட்டியிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று வெற்றியாளர்களின் விவரம் EMIS தளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

❖ இலக்கிய மன்றப் போட்டிகளில் ஒவ்வொரு போட்டியிலும் முதல் இடம் பெற்ற வெற்றியாளர், அடுத்த நிலைப் போட்டியான மாவட்ட நிலையிலான போட்டியில் பங்கு பெறுவர்.

❖ வினாடிவினா மன்றப் போட்டியில் முதலிடம் மற்றும் இரண்டாமிடம் பெறும் இரு குழுக்களும் அடுத்தநிலைப் போட்டியான மாவட்ட நிலையிலான போட்டியில் பங்கு பெறுவர்.

❖ சிறார் திரைப்பட மன்றப் போட்டிகளில் ஒவ்வொரு போட்டியிலும் முதல் இடம் பெற்ற வெற்றியாளர், அடுத்த நிலைப் போட்டியான மாவட்ட நிலையிலான போட்டியில் பங்கு பெறுவர்.

❖ **வட்டார அளவிலான அமைப்புக் குழு உறுப்பினர்கள் :**

இலக்கிய மன்றம், வினாடிவினா மன்றம் மற்றும் சிறார் திரைப்பட மன்றம்_சார்ந்த போட்டிகளை வட்டார அளவில் திட்டமிட்டு மேற்கொள்ளும் பொருட்டு கீழே குறிப்பிட்டவாறு இலக்கிய மன்றப் போட்டிகளை நடத்துவதற்கு ஒரு அமைப்புக் குழுவினையும், வினாடிவினா மன்றப்



Scanned with OKEN Scanner

போட்டியினை நடத்துவதற்கு ஒரு அமைப்புக் குழுவினையும், சிறார் திரைப்பட மன்றப் போட்டிகளை நடத்துவதற்கு ஒரு அமைப்புக் குழுவினையும், தனித்தனியே அமைத்தல் வேண்டும். இவ்வாறாக அமைக்கப்பட்ட அமைப்புக் குழுவின் விவரங்களை சார்ந்த வட்டாரத்திற்கான வட்டாரக் கல்வி அலுவலர்கள் முதன்மைக் கல்வி அலுவலருக்கு தெரிவித்திடல் வேண்டும்.

- ❖ வட்டாரக் கல்வி அலுவலர் – 1
- ❖ போட்டி நடைபெறும் பள்ளியின் தலைமையாசிரியர் முதன்மை அமைப்பாளராக செயல்படுவார்.
- ❖ வட்டார வள மைய மேற்பார்வையாளர்
- ❖ ஆசிரியர் பயிற்றுநர் – 1
- ❖ பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர்/உறுப்பினர் – 1

வட்டார அளவிலான அமைப்புக் குழுவானது, வட்டார அளவில் நடைபெறும் போட்டிக்கான இடத்தினை தேர்வு செய்தல், போட்டிக்கான நடுவர் குழுவினை தேர்வு செய்தல், நடுவர்களின் மதிப்பெண் தாள்கள் முறையாகப் பராமரித்தல், போட்டியின் இறுதியில் வெற்றியாளர்களை முறையாக அறிவித்தல் போன்ற அனைத்து செயல்பாடுகளுக்கும் பொறுப்பு வகித்தல் வேண்டும்.

மேலும், ஒவ்வொரு போட்டிக்குமான முதல் மூன்று இடங்களை பிடிக்கும் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட Consolidated Mark Sheet படிவத்தில் வட்டாரக் குழு அமைப்பினரின் கையொப்பம் இடம் பெற்றிருத்தல் வேண்டும். இதன் பின்னரே வெற்றியாளர்களை அறிவித்தல் வேண்டும். ஒவ்வொரு போட்டிக்குமான வெற்றியாளர் அறிவிக்கப்பட்டவுடன் அன்றைய தினமே



Scanned with OKEN Scanner

அப்போட்டிக்கான வெற்றியாளர்களின் தகவல்கள் EMIS தளத்தில் உள்ளீடு செய்யப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் திட்டமிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வட்டார அளவிலான அமைப்புக் குழுவின் பொறுப்பாகும்.

**வட்டார அளவில் போட்டிகள் நடத்துவதற்கான நிதி :**

- வட்டார அளவிலான போட்டிகளை நடத்துவதற்கு, இணைப்பு 7–ல் உள்ளவாறு ஒவ்வொரு வட்டாரத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்து கீழே அட்டவணையில் உள்ளவாறு மாவட்டங்களுக்கு விடுவிக்கப்படும். இந்நிதியினை போட்டிகளை நடத்துவதற்கான செலவினங்களை (ஒலி–ஒளி அமைப்பு, பேனர், தேனீர், தண்ணீர், மாணவர்களுக்கான பயணப்படி மற்றும் சான்றிதழ்) மேற்கொள்ள பயன்படுத்துதல் வேண்டும்.

- வட்டார அளவிலான மன்றப் போட்டிகள் நடத்துதல் சார்ந்த அனைத்து வரவு செலவு கணக்குகளும் தனியாகப் பராமரிக்கப்பட்டு, முறையாகத் தணிக்கை செய்யப்பட்டு, தணிக்கை அறிக்கையினை பயன்பாட்டு சான்றுடன் (Utilisation Certificate) சார்ந்த வட்டார வளமையத்தில் பராமரிக்கப்படுதல் வேண்டும். மேலும், அதன் நகலினை முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.



Scanned with OKEN Scanner

| LITERARY CLUB, QUIZ CLUB & MOVIE CLUB BLOCK LEVEL COMPETITIONS 2025-26 DISTRICT-WISE FUND RELEASE | | |
|---|---|---|
| SL No | District Name | Total Costs (Amount in Rupees) |
| 1 | ARIYALUR | 143580 |
| 2 | CHENGALPATTU | 229270 |
| 3 | CHENNAI (EXT. GCC) | 202160 |
| 4 | COIMBATORE | 288060 |
| 5 | CUDDALORE | 294070 |
| 6 | DHARMAPURI | 310280 |
| 7 | DINDIGUL | 236700 |
| 8 | ERODE | 340360 |
| 9 | KALLAKURICHI | 263850 |
| 10 | KANCHEEPURAM | 151720 |
| 11 | KANNIYAKUMARI | 159390 |
| 12 | KARUR | 188410 |
| 13 | KRISHNAGIRI | 347030 |
| 14 | MADURAI | 341280 |
| 15 | MAYILADUTHURAI | 89740 |
| 16 | NAGAPATTINAM | 138330 |
| 17 | NAMAKKAL | 261570 |
| 18 | PERAMBALUR | 123410 |
| 19 | PUDUKKOTTAI | 326960 |
| 20 | RAMANATHAPURAM | 113350 |
| 21 | RANIPET | 100930 |
| 22 | SALEM | 442860 |
| 23 | SIVAGANGAI | 255090 |
| 24 | TENKASI | 112520 |
| 25 | THANJAVUR | 331950 |
| 26 | THE NILGIRIS | 108260 |
| 27 | THENI | 148210 |
| 28 | THOOTHUKKUDI | 161180 |
| 29 | TIRUCHIRAPPALLI | 342860 |
| 30 | TIRUNELVELI | 138310 |
| 31 | TIRUPATHUR | 183600 |
| 32 | TIRUPPUR | 284740 |
| 33 | TIRUVALLUR | 317320 |
| 34 | TIRUVANNAMALAI | 451470 |
| 35 | TIRUVARUR | 192290 |
| 36 | VELLORE | 205360 |
| 37 | VILLUPURAM | 374450 |
| 38 | VIRUDHUNAGAR | 239620 |
| | **Grand Total** | **8940540** |



Scanned with OKEN Scanner

மேற்குறிப்பிட்ட அனைத்து வழிகாட்டு நெறிமுறைகளையும் தவறாமல் பின்பற்றி வட்டார அளவிலான இலக்கிய, வினாடிவினா மற்றும் சிறார் திரைப்பட மன்றப் போட்டிகளை திட்டமிட்டு நடத்திடும்படி அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்புகள் :

1. வட்டார அளவிலான இலக்கிய மன்றப் போட்டிகளுக்கான தலைப்புகள்
2. இலக்கிய மன்றப் போட்டிகளுக்கான நடுவர் மதிப்பீட்டு படிவம்
3. இலக்கிய மன்றப் போட்டிக்கான மூன்று நடுவர்களின் மதிப்பெண்களை தொகுக்கும் தொகுப்பு மதிப்பீட்டு படிவம் (consolidated scoring sheet)
4. வட்டார அளவிலான வினாடி வினா மன்றப் போட்டி நடத்துவதற்கான வழிமுறைகள்
5. வினாடி வினா மன்றப் போட்டிக்கான நடுவர் மதிப்பீட்டு படிவம்
6. ஒவ்வொரு வட்டாரத்திற்குமான நிதி ஒதுக்கீடு விவரம்
7. வட்டார அளவிலான மன்றப் போட்டிகளுக்கான சான்றிதழ்.
8. வட்டார அளவிலான மன்றப் போட்டிகளுக்கான பேனர்.
9. பள்ளி அளவிலான சிறார் திரைப்பட மன்றப் போட்டிக்கான தலைப்புகள்
10. சிறார் திரைப்பட மன்றப் போட்டிகளை நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்.

பள்ளிக் கல்வி இயக்குநர் 3/2

சி.மு
25.02.25



Scanned with OKEN Scanner